**செம்பாக்கம் நகராட்சியில் 16.2.2021ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 1289ல் காலமுறை பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.86000/—க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.763** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியில் பொது நிநதயின் கீழ் 4.2.2021ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆலவட்டம்மன் கோயில் தெரு எம்.ஜி.ஆர். பூங்காவில் பழுதடைந்த மின் கேபிள்கள் மாற்றி அமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் பணி | 9.80 | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.90% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.764** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சி பகுதியல் வார்டு எண்.12ல் குப்பை சேகரிப்பு மையம் (Dumpsite) இருந்த இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Bio–Mining பணிகள் சென்னை அண்ணா பல்கலைகழக சுற்றுச்சூழல் கல்வியியல் மையத்தின் கண்காணிப்பின் கீழ் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17731/2019/பி3 நாள் 11.1.2021ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிப்பு மையம் (Dumpsite) அமைந்துள்ள பகுதியில் உள்ள நீராதரங்களை மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகம் மூலம் பகுப்பாய்வு செய்து அறிக்கை பெற்று அனுப்பி வைக்குமாறும், அதன் நகலினை தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சியின் வார்டு எண்.12ல் குப்பை சேகரிப்பு மையம் (Dumpsite) இருந்த இடத்தில் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்படும் ஆழ்துளை கிணற்றில் நீர் பகுப்பாய்வு (Water Analysis Report) செய்து அறிக்கை வழங்குவதற்கான கட்டணத் தொகை ரூ.13120/- மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம் அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.765** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியின் 2019–20ம் ஆண்டின் தணிக்கை அறிக்கை தட்டச்சு செய்து ஐந்து நகலெடுத்து பைன்டிங் செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கு உடன் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், அவசர அவசியம் கருதி இப்பணியினை உள்ளூர் நிறுவனத்திடம் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.16500/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.766** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.210/2021/அ4 நாள் 10/2/2021ல் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு 2019–20 மற்றும் 2020–21 ஆகிய இரு நிதியாண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய ஆண்டு சந்தா தொகை முறையே ரூ.2500/- வீதம் மொத்தம் ரூ.5000/-ஐ உடன் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு செலுத்த வேண்டிய இரு நிதியாண்டுகளுக்கான சந்தா தொகை ரூ.5000/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை செலுத்தியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.767 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

செம்பாக்கம் நகராட்சியில் 2021–22ம் நிதியாண்டிற்கு பொது சுகாதார பிரிவின் கீழ் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 12.2.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் தளவாடங்கள் சப்ளை செய்தல் பணி | 6.00 | டி. எ. ஏஜென்சிஸ் சென்னை – 11 | குறைவு |
| | | | தி சென்னை தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு சங்கம் சென்னை – 9 | அதிகம் |
| 2 | பொது சுகாதார பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் பணி | 2.00 | டி. எ. ஏஜென்சிஸ் சென்னை – 11 | குறைவு |
| | | | தி சென்னை தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு சங்கம் சென்னை – 9 | அதிகம் |
| 3 | பொது சுகாதார பணிக்கு தேவையான சுண்ணாம்புத்தூள் (நீர்த்த சுண்ணம்) சப்ளை செய்தல் பணி | 2.00 | ஆர்.எஸ்ஆர். எண்டர்பிரைசஸ் சென்னை 45. | குறைவு |
| | | | தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் சென்னை 45. | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.768** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

செம்பாக்கம் நகராட்சியில் 2021—22ம் நிதியாண்டிற்கு பொது சுகாதார பிரிவின் கீழ் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 16.2.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்கள் JCB-1 எண்ணிக்கை, காம்பாக்டர்கள் – 3 எண்ணிக்கை மற்றும் லாரி–1 எண்ணிக்கை தகுதிச்சான்று பெற ஆண்டு பராமரிப்பு செய்யவும், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில் மாற்றம் செய்யும் பணி மற்றும் வாகனங்களுக்கு தேவையான ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்கள் செலுத்தும் பணி | 10.00 | எம்.கே.எஸ் மோட்டார்ஸ் சென்னை 117. | குறைவு |
| | | | சரவணா பெயின்டிங் ஒர்க்கஸ் சென்னை 43 | அதிகம் |
| 2 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் TATA ACE 6 எண்ணிக்கையிலான வாகனங்கள் தகுதிச்சான்று பெற ஆண்டு பராமரிப்பு செய்யவும், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில் மாற்றம் செய்யும் பணி மற்றும் வாகனங்களுக்கு தேவையான ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்கள் செலுத்தும் பணி | 10.00 | எம்.கே.எஸ் மோட்டார்ஸ் சென்னை 117. | குறைவு |
| | | | சரவணா பெயின்டிங் ஒர்க்கஸ் சென்னை 43 | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.769** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சியில் **2021–22**ம் நிதியாண்டிற்கு பொது சுகாதார பிரிவின் கீழ் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக **16.2.2021** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Operation and Maintenance of Battery Operated vehicles (BOV) – 16 Nos at Sembakkam Municipality | 7.36 | சி ஓய் குரூப் ஆப் கம்பெனி சென்னை 1 | குறைவு |
| | | | ஓம் ஈவி மோட்டார்ஸ் சென்னை 118 | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.770** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் **2021–22**ம் நிதியாண்டிற்கு பொது சுகாதார பிரிவின் கீழ் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக **16.2.2021** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான படிவங்கள் நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் அச்சிட்டு விநியோகம் செய்தல் பணி | 6.00 | ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ் | குறைவு |
| | | | ரேவதி பிரிண்டர்ஸ் | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.771** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சியில் 2021–22ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 11.2.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 9.80 | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர்பி கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 3 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள கணினி, பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 2.00 | ஆரஞ்சு சிஸ்டம்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | கிரிஷ் கம்யூட்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |
| 4 | வார்டு எண்.1 முதல் 7 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 5.00 | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 5 | வார்டு எண்.8 முதல் 15 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 5.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர்பி கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 6 | நகராட்சி பகுதிகளில் 17 இடங்களில் மற்றும் அம்மா உணவகத்தில் உள்ள | 9.80 | போர்டிஸ் கார்பரேஷன் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக செய்யும் இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | | ஸ்ரீ பாரத் அக்வா டெக் | மதிப்பீட்டை விட 2.20% அதிகம் |
| 7 | நகராட்சி பகுதியில் 145 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஆர்பி கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட 1.90% அதிகம் |
| 8 | 16 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குடிநீர் விநியோகம் செய்ய பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | எஸ்ஆர் மேன் பவர் கன்சல்டன்சி | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 9 | அலுவலக பராமரிப்பில் உள்ள நகலெடுக்கும் இயந்திரம் மற்றும் வண்ண நகலெடுக்கும் இயந்திரம் ஆண்டு பராமரிப்பு பணி மற்றும் தேவையான டோனர்கள் கொள்முதல் செய்தல் | 2.50 | யுனிகாம் இன்போ டெல் பி லிட் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஸ்ரீ வாரி கம்ப்யூட்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |

அலுவலக குறிப்பு: பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களுக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.772** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் 2021–22ம் நிதியாண்டிற்கு பொறியியல் பிரிவின் கீழ் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 16.2.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஆர்பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | | ஆர்பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |
| 3 | பசுமை உரக்குடில்களில் அமைக்கப்பட்டுள்ள பெரிய அறவை இயந்திரம் (Shredding Machine) ஒன்று மற்றும் சிறிய அறவை இயந்திரங்கள் இரண்டு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 4 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள 10 கேவிஎ ஆன்லைன் யுபிஎஸ். சர்வீஸ் செய்தல் மற்றும் 16 எண்ணிக்கை மின் கலன்கள் ஆண்டு பராமரிப்பு பணி | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 5 | அலுவலக பராமரிப்பில் உள்ள 125 கேவிஎ ஜெனரேட்டர்கள் 2 எண்ணிக்கை மற்றும் எஎம்எப் பேனல் போர்டு 2 எண்ணம் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 4.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 6 | குளோரினேஷன் அமைப்பில் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்தல் பணி | 3.00 | ராம் அசோசியேட்ஸ் | மதிப்பீட்டை விட 0.65% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.70% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களுக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. வரிசை எண்.3, 4 மற்றும் 5 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வராததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.773 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.12.2020 முதல் 31.12.2020 வரையான காலத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் | 55800 |

| | | |
|---|---|---|
| | விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | |
| 2 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 85 நாட்களுக்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியது மற்றும் மருத்துவ பணியாளர்கள் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்ட ஆட்டோ செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 144500 |
| 3 | வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு வெளியேற்றியமைக்கு செலவினத் தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 984713 |
| 4 | வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரை 10 எச்பி ஆயில் இன்ஜின், ஜெசிபி, மணல் மூட்டை மற்றும் பணியாட்களை கொண்டு வெளியேற்றியமைக்கு செலவினத் தொகை ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் நிறுவனத்திற்கு வழங்கியது | 789673 |
| 5 | வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரை 7.5 எச்பி, 5 எச்பி ஆயில் இன்ஜின், ஜெசிபி, மணல் மூட்டை மற்றும் பணியாட்களை கொண்டு வெளியேற்றியமைக்கு செலவினத் தொகை ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் நிறுவனத்திற்கு வழங்கியது | 989315 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.774 செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்.13

செம்பாக்கம் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் போதிய அளவில் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால், அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறியீட்டின் படி கூடுதலாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்களில் 49 பணியாளர்களையும் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி K.Dis No.32976/J3/2018 Dated: 11.1.2019 ன் படி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஓர் ஆண்டிற்கு மெஸ்ஸர்ஸ் S.R. Manpower Consultancy, 464/938, TH Road, Old Washermanpet, Chennai 21 என்ற நிறுவனத்தை இந்நகர் மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 6.3.2019ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. (இந்நகர் மன்ற தீர்மானம் எண்.472 நாள் 7.3.2019ல்

பின்னேற்பு ஒப்புதல் அளித்துள்ளது) அந்நிறுவனத்தின் முதலாம் ஆண்டின் ஒப்பந்த காலம் 6.3.2020 தேதியில் முடிவடைந்தது.

இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளும் பணி திருப்திகரமாக இருந்த காரணத்தினால், இரண்டாம் ஆண்டிற்கு 7.3.2020 முதல் 6.3.2021 வரை அதே விலை விகித அடிப்படையில் தொடர்ந்து மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.622 நாள் 28.2.2020ல் ஒப்புதல் அளித்ததன் பேரில் 28.2.2020ம் தேதியில் இரண்டாம் ஆண்டிற்கான பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில், இரண்டாம் ஆண்டிற்கான ஒப்பந்த காலம் 6.3.2021ம் தேதியில் முடிவடைவதாலும், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்திலேயே பணியினை தொடர்ந்து செய்ய 12.2.2021ம் தேதிய கடிதத்தில் இசைவு தெரிவித்துள்ளதன் பேரிலும், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியினை தொய்வின்றி தொடரவும், அவசர அவசியம் கருதியும் மேலும் ஒரு ஆண்டிற்கு 7.3.2021 முதல் 6.3.2022 வரை தொடர்ந்து மேற்கொள்ளவும், மூன்றாம் ஆண்டிற்கான கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.90.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் – 2021 நடைபெற உள்ளதால், தேர்தல் நன்னடத்தை விதி எந்த நேரத்திலும் அமுலில் வர உள்ளதால், அவசர அவசியம் கருதி நகர் மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மூன்றாம் ஆண்டிற்கு கால நீட்டிப்பு செய்து நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.

தீர்மான எண்.775 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.14

2020–21ம் ஆண்டுக்கு தீவிர சொத்து வரி நிலுவை தொகை வசூலிக்க ஏதுவாக 1 முதல் 15 வார்டுகளுக்கு கைபேசியில் நிலுவை தொகை விவரம் தெரியபடுத்த குழு தகவல் அனுப்பி நிலுவையினை வசூலிக்க குழு தகவல் அறிக்கை அனுப்ப உள்ளூர் கணிணி நபர்களிடம் விலைப்புள்ளி பெற்று உரிய மேல் நடவடிக்கை தொடரலாம். இதற்கு ஏற்படும் தோரரய செலவினம் ரூ.50000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பொது நிதியின் கீழ் ரூ.50000/–ஐ செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மான எண்.776 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகள் தொழில் செய்வதற்கு மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட PM Street Vendor's AtmaNirbhar Nidhi (PMSVANidhi) திட்டத்தன் கீழ் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலணை செய்து இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டியுள்ளதால், அதற்கு விண்ணப்பதாரர்களின் தொலைபேசி எண்களை ஆதார் எண்ணுடன் பதிவேற்றம் செய்வதற்கு ஏதுவாக மூன்று எண்ணிக்கையிலான கைரேகை பதிவு இயந்திரங்கள் தேவைப்படுகிறது.

மேற்படி கைரேகை பதிவு இயந்திரங்களை உற்பத்தி / விநியோகஸ்தர்கள் ஆகிய நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு தோராய செலவினம் ரூ.14200/— மற்றும் விண்ணப்பங்கள் பதிவேற்றம் மற்றும் வலைதள பதிவு செய்வதற்கான தோராய ஊதியம் செலவினத் தொகை ரூ.17700/— வழங்குவதற்கும், அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனமான Smart Bio Secure Systems நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.777** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.16

செம்பாக்கம் நகராட்சியில் சேகரமாகும் உலர் கழிவுகளை பொது சுகாதார நலன் கருதி தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், உள்ளூர் லாரி உரிமையாளர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்தவும், இதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரிடம் 29.1.2021ம் தேதியில் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்காக 16.2.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியின் உலர் கழிவுகள் 7 முதல் 10 மெட்ரிக் டன் அளவிற்கு டிப்பர் லாரி மூலம் அகற்றுதல் பணி (லாரி வாடகை, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி, டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | 9.50 | ராதா டிரான்ஸ்போர்ட், சிங்கபெருமாள் கோவில் | குறைவு |
| | | | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் நசரத்பேட்டை | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.778 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.17

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாநிலத்தில் பசுமை சூழ்நிலை அதிகரிக்கும் வகையில், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் பயன்பாடின்றி உள்ள திறந்தவெளி நிலங்களில் மியாவாக்கி முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நட சட்டமன்றத்தில் விதி எண்.110ன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15081/2018/பிடி3 நாள் 18.7.2020ல் நகராட்சி பகுதிகளில் 400 சதுர மீட்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள திறந்த வெளி இடங்களில் பசுமை சூழ்நிலை அதிகரிக்கும் வகையில் நிலத்தை தேவைக்கேற்ப வளப்படுத்தி வனத்துறை மற்றும் வேளான்மை துறையின் ஆலோசனையின் பேரில் மரக்கன்றுகளை தேர்வு செய்து மரக்கன்றுகளை நடுவதும், மரக்கன்றுகளை குறைந்தபட்சம் ஐந்து அல்லது ஆறாண்டுகள் பராமரிப்பு செய்யவும், மரங்கள் குறிப்பிட்ட அளவு வளர்ந்த பின் எவ்வித பராமரிப்பின்றி இயற்கையாகவே நிலைத்து நிற்கும் வகையில் வேம்பு மரம், நாவல் மரம், மா மரம், தேக்கு மரம், இளவம் மரம், தேன்கனி விதை மரம், அத்தி மரம், வில்வ மரம், வெங்காரை மரம், நெல்லி மரம், புளிய மரம், ஈச்சம்மரம், குருந்து அல்லது காட்டு நாரத்தை மரம், சரக்கொன்றை மரம், ஊஞ்ச மரம், நிலந்தை மரம், புங்கு மரம் போன்ற மரங்களை நட்டு பராமரிக்கவும், தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொது நிதியிலிருந்து மரங்களை நடுவதற்கு இந்நகராட்சிக்கு இரண்டு இடங்கள் தேர்வு செய்து செயல்படுத்த கடிதம் வரப்பெற்றுள்ளதன் பேரில், கீழ்கண்ட இடங்களில் 400 சதுர மீட்டருக்கு குறைவில்லாது மரக்கன்றுகள் நட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 மன்றதின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. ஹன்சா கார்டன் பேஸ் 1 மற்றும் 2 பகுதியில் உள்ள திறந்தவெளி இடத்தில் மரம் நடுதல் பணி.
2. நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் சுடுகாட்டில், குடியிருப்பு பகுதியினை ஒட்டி மரம் நடுதல் பணி.

அலுவலக குறிப்பு: மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.779 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.18

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் விதி எண்.110ன் கீழ் பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5060/2020/தி1 நாள் 17.10.2020ல், பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் இந்நகராட்சியில் ஒரு பூங்காவினை தேர்வு செய்து அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள அன்னை அஞ்சுகம்

அம்மையார் பூங்காவில் கீழ்கண்ட பணியினை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்காவில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைத்தல் பணி | 10.00 |
| 2 | அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்காவில் யோகா மையம் அமைத்தல் பணி | 10.00 |

அலுவலக குறிப்பு: மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.780 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.19

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.20452.2020/எல்எ3 நாள் 10.11.2020ல் 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–21க்கு முதல் தவணையாக இந்நகராட்சிக்கு ரூ.6457077/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண்.20452/2020/எல்எ3 நாள் 17.11.2020ல் ஒதுக்கீடு தொகையினை செலவு செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| | **குடிநீர் பணிகள்** | |
| 1 | வார்டு எண். 5 சங்கோதியம்மன் கோயில் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 2 | வார்டு எண்.5 துர்கா காலனி 1வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 3 | வார்டு எண்.5 பஜனை கோயில் 2வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 4 | வார்டு எண்.7 கௌசிக் அவென்யு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 5 | வார்டு எண்.7 ஷா அவென்யு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 6 | வார்டு எண்.7 சுந்தர் அவென்யு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 7 | வார்டு எண்.7 சரவணா நகர் 7வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் | 345000 |

| | | |
|---|---|---|
| | பணி | |
| 8 | வார்டு எண்.12 வேணுகோபால்சாமி தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 9 | வார்டு எண்.13 வீரமாமுனிவர் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 10 | வார்டு எண்.13 ரங்கா காலனி மெயின் ரோடு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 11 | வார்டு எண்.13 ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 12 | வார்டு எண்.13 இம்மானுவேல் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 13 | வார்டு எண்.13 அண்ணா தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 14 | வார்டு எண்.14 நேத்தாஜி தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 15 | வார்டு எண்.14 எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| 16 | வார்டு எண்.15 திருக்குறள் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் சிறுமின் விசை இறைப்பான் பொருத்தும் பணி | 345000 |
| | **திடக்கழிவு மேலாண்மை திட்டம்** | |
| 1 | ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனம் (Battery Operated Vehicle) 7 எண்ணிக்கைகள் சப்ளை செய்தல் பணி | 1260000 |
| | மொத்தம் | **6780000** |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்ட ஒதுக்கீடு தொகை போக கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.781** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி